## சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம் -2013

சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென கான் கருதிய என்னுடைய கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்றாகவும் இவ்வறிக்கை கருத்தப்பட வேண்டும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக

நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை அரச துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட அல்லது நீக்கப்பட்ட 04 உத்தியொகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 573,338 கூட்டுமொத்தத் தொகையான கடன் மீதிகள் 02 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது. எவ்வாறாயினும், நிறுவகம் அந்த நிலுவையாகவிருக்கின்ற மீதிகளை அறிவிடுவதற்கு நடவடிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 14,393 கூட்டுமொத்தத் தொகையான சம்பளக் கடன்கள் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அவற்றினை அறவிடாமல் 02 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது.

(இ) கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 12,046 தொகை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் 02 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது.

### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ஒவ்வொரு விடயங்களிற்கும் எதிரே குறிப்பிடப்பட்ட பின்வரும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | | பெறுமதி | கிடைக்கப்பெறாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | காணி மற்றும் கட்டிடங்கள் | 39,078,017 | உரித்துறுதிகள் |
| (ஆ) | பொறி மற்றும் இயந்திரங்கள் | 2,294,781 | நிலையான சொத்துப் பதிவேடுகள |
| (இ) | மோட்டார் வாகனங்கள் | 237,372 | |
| (ஈ) | தளபாடம் பொருத்திகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 23,107,830 | |
| (உ) | ஏனைய சொத்துக்கள் | 777,275 | |
| (ஊ) | புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் | 242,287 | |
| (எ) | நலன்புரிப் பொருட்கள் | 1,585,071 | |
| (ஏ) | சுகாதார உபகரணங்கள் | 105,432 | |
| (ஐ) | ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 23,300 | |
| (ஒ) | விளையாட்டுப் பொருட்கள் | 978,977 | |
| (ஓ) | கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 7,067,789 | விரிவான பட்டோலைகள் மற்றும் காலப்பகுப்பாய்வு |

### 2.2.3 போதிய அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் 1998 மார்ச் 06 ஆந் திகதிய பிஈ/01/174/11(ஆ) ஆம் இலக்க கடிதம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2013 மே 23 ஆந் திகதிய 08/2013 ஆம் இலக்க தாபனங்கள் சுற்றறிக்கை கடிதம் என்பவற்றின் பிரகாரம், அரசாங்க உத்தியோத்தர்களிற்காக மொழித்தேர்ச்சிக்காக செலுத்த வேண்டிய படிகள் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்டச் சபைக்கு விரிவாக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2012 ஆம் ஆண்டிலிருந்து 2013 மே 31 வரை மொழித் தேர்ச்சிப்படியாக மூன்று கல்விசாரா உத்தியோகத்தர்களிற்கு ரூபா 27,650 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் இக்கொடுப்பனவு 2014 ஏப்ரல் 30 வரையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து

அறவிடப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில், பணிப்பாளர் 2013 மே மாதமளவில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து சுற்றறிக்கை பெற்ற பின்னர் படிக் கொடுப்பனவுகள் 2013 யூனிலிருந்து நிறுத்தப்பட்டிருந்தது என அறிவித்திருந்தார்.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 109 ஆம் பிரிவு | 2012 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஏப்ரல் 30 வரை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணங்கள் | |
| நி.பி. 756 | மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறான களஞ்சியங்களின் வருடாந்த பௌதீக மெய்மையாய்வு 2014 மே 22 வரையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக்கோவை | |
| (i) அத்தியாயம் X இன் பிரிவு 20.6 | 02 கல்விசார் உத்தியோகத்தர்களால் எடுக்கப்பட்ட சம்பளமற்ற விடுமுறைகளின் விபரங்கள் மாதாந்தம் படிவம் பொது 96 இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப் பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் XXVII இன் பிரிவு | பல்கலைக்கழகத்தின் கல்விசார் |

3:1 உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச் செல்லல் என்பன வருகைப் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பில் பணிப்பாளர் வழமையாக கல்விசார் உத்தியோகத்தர்கள் அவர்களுடைய வருகையை பதிவேட்டில் அவர்களுடைய வருகையை மாத்திரமே பதிந்திருந்தரென என எனக்குத் தெரிவித்தார்.

## 3. நிதிசார் மீளாய்வு

## 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டில் நிறுவகத்தின் தொழிற்பாடுகள் விளைவித்திருந்த மீண்டுவரும் செலவுகளிற்கான ரூபா 68,364,000 ஆன அரசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுக்க முன்னர் உள்ள ரூபா 70,750,664 ஆன பற்றாக்குறையை முன்னைய ஆண்டிற்கான ரூபா 57,500,000 அரசாங்க மானியத்தை கணக்கிற்கு எடுக்க முன்னரான ரூபா 53,926,128 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடலாம் ஆகையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 16,8254,536 ஆல் மேலும் ஒரு வீழ்ச்சியைக் காட்டுகின்றது. ஆளணி வேதனங்கள், பரீட்சை செலவினங்கள் மற்றும் நலன்புரிச் செலவினங்கள் என்பன அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1. செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் கல்விசார் செயலாற்றல் பின்வருமாறு இருந்தன.

### (அ) பரீட்சைகளின் பெறுபேறுகள்

2013 இல் நடைபெற்ற இறுதிப் பரீட்சைகள் மற்றும் சித்தியடைந்த பட்டதாரி மாணவர்களின் பின்வருமாறு உள்ளன.

| விபரங்கள் | இசைப் பீடம் | நடன பீடம் | நாடகம் மற்றும் அரங்க பீடம் | கண்காட்சி மற்றும் தொழில் நுட்பக் கலைகள் பீடம் |
|---|---|---|---|---|
| மீளாய்வாண்டின் போது இறுதிப் பரீட்சைகளிற்காக தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | 26 | 25 | 50 | 43 |
| பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை | 19 | 22 | 46 | 33 |
| பரீட்சைக்காக தோற்றிய மாணவர் எண்ணிக்கையின சதவீதமாக பட்டப் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களின் எண்ணிக்கை | 73.07 | 88 | 92 | 76.74 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) இறுதிப் பரீட்சைக்கு தோற்றி இசைப் பீடத்தின் 26 மாணவர்களில் இறுதிப் பரீட்சைக்கு தோற்றிய மொத்த மாணவர்களின் எண்ணிக்கையின் 73.07 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 19 மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்திருந்தனர்.

(ii) இறுதிப் பரீட்சைக்கு தோற்றி கண்காட்சி மற்றும் தொழில் நுட்பக் கலைகள் பீடத்தின் 43 மாணவர்களில் இறுதிப் பரீட்சைக்கு தோற்றிய மொத்த மாணவர்களின் எண்ணிக்கையின் 76.74 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 33 மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்திருந்தனர்.

**(ஆ) ஒரு மாணவருக்கான கிரயம்**

பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடத்தின் மொத்தக் கிரயம் மற்றும் மீளாய்வாண்டிற்கான மாணவர் கிரயம் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | இசைப் பீடம் | நடன பீடம் | நாடகம் மற்றும் அரங்க பீடம் | கண்காட்சி மற்றும் தொழில் நுட்பக் கலைகள் பீடம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| மொத்தக் கிரயம் (ரூபா) | 12,496,872 | 9,350,020 | 21,280,967 | 28,894,594 | 72,022,454 |
| மொத்த மாணவர் எண்ணிக்கை | 305 | 197 | 249 | 246 | 997 |
| ஒரு மாணவருக்கான கிரயம் (ரூபா) | 40,973 | 47,462 | 85,466 | 117,458 | 67,154 |

கண்காட்சி மற்றும் தொழில் நுட்பக் கலைகள் பீடத்தில் ரூபா 117,458 தொகையான ஒரு மாணவனுக்கான உயர்ந்த கிரயம் பதிவுசெய்திருந்த அதேநேரம் இசைப் பீடத்தில் ரூபா 40,973 தொகையான ஒரு மாணவனுக்கான குறைவான கிரயத்தை பதிவுசெய்திருந்தது.

**(இ) மகாபொல மற்றும் உதவிப்பணம்**

மீளாய்வாண்டின் போது 572 மாணவர்களிற்கு உதவிப் பணங்களாக ரூபா 5,552,500 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 108 மாணவர்களிற்கு மாஹாபொலவாக ரூபா 660,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த மாணவர்கள் அவர்களுடைய பாடநெறிகளை இடைநிறுத்தியதாக 2014 மே 22 ஆன கணக்காய்வு திகதிவரை 610 மாணவர்களுக்கு மாஹாபொல சம்பந்தமாக ரூபா 1,826,900 தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக்கோவையின் XXII ஆம் அத்தியாயத்தின் 5.2 மற்றும் 5.3 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ரூபா 5 மில்லியன் மோசடியான காசோலை மற்றும் ரூபா 4.5 மில்லியன் மோசடியான கொடுப்பனவு என்பற்றுக்காக குற்றஞ்சாட்டப்பட்ட சிரேஷ்ட உதவி காசாளர் மற்றும் களஞ்சிய

காப்பாளர் என்போருக்கு எதிராக முறையான விசாரணை தொடங்குவதற்கு ஏறத்தாழ ஒரு ஆண்டுகாலம் தாமதப்பட்டிருந்தது.

(ஆ) 2011 இல் செய்யப்பட்ட நிலவரிப்பு, திரைச்சீலைகள், சிற்பவேலை உருளைகள் மற்றும் அடுக்கு கட்டில்கள் என்பனவற்றின் கொள்வனவுகள் தொடர்பில் ரூபா 1,395,000 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிறுவகம் மேற்குறிப்பிட்ட மேலதிக கொடுப்பனவிற்காக பொறுப்புடைய நபர்களிற்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவகம் மட்டக்களப்பிலுள்ள தனியார் வங்கியில் பேணப்பட்ட தெரியாத நபரொருவரின் வங்கி கணக்கொன்றின் ஊடாக நிறுவகத்தின் உத்தியோகத்தரால் ரூபா 3,622,315 பெறுமதிக்கு பதின்நான்கு காசோலை காசாக்குமிடத்து காசோலை மோசடியானதென கண்டுபிடித்த காரணத்தால் அடைந்த நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிறுவகம் உள்ளபடியான தேவைகளை கருத்திற்கொள்ளாமல் ரூபா 1.27 மில்லியன் கிரயத்தில் நிழற்படப்பிரதி இயந்திரத்திற்காக 106 ரோனர்கள் கொள்வனவு செய்திருந்ததுடன் ரோனர்களின் குறைந்த தரமான நிழற்பட பிரதி இயந்திரங்களின் ரம், ரம் பிளேட், கீட்டர் ரோலர் போன்ற உபபாங்களை பாதித்திருந்தது. இதன்விளைவாக, அத்தகைய 21 ரோனர்கள் 2014 மே 22 ஆன கணக்காய்வு திகதிவரை நிறுவகத்தின் களஞ்சியத்தில் பயன்பாடின்றி இருந்தது.

## 4.3 மனிதவள முகாமைத்துவம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணியின் நிலைமை கீழே தரப்பட்டுள்ளது.

| பதவியணி வகை | அங்கீகரித்த ஆளணி | உள்ளபடியான ஆளணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை |
|---|---|---|---|---|
| கல்விசார் | 38 | 35 | 03 | - |
| கல்விசார் துணைநிலை | 07 | 01 | 06 | - |
| நிர்வாகம் | 01 | 01 | -- | |
| நிர்வாகம் துணைநிலை | 04 | 02 | 02 | - |
| தற்காலிக (கல்விசார்) | 06 | 01 | 05 | - |

| | | | | |
|---|---|---|---|---|
| வருகையாளர் | - | - | - | 15 |
| மொத்தம் | 56 | 40 | 16 | 15 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிறுவகமானது 16 வெற்றிடங்களை நிரப்புவதற்கு கீளாய்வாண்டு இறுதிவரைகூட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிதகைமை மற்றும் நல்லாளுகை

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் 2010 மார்ச் 10 ஆந் திகதிய பிஎவ்/ஆர்//2/2/3/5/(4) சுற்றறிக்கை கடிதத்தின் பிரகாரம் நிறுவகம் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம் மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கை என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கொள்வனவுத் திட்டம்

2006 கொள்வனவு வழிகாட்டல்களின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்டவற்றிற்கும் உண்மையான வருமானம் மற்றும் செலவினத்திற்கும் இடையில் பாரிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் குறைபாடுகள் காலத்திற்கு காலம் நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஆ) கொள்வனவு